# 1.0 - கடந்தகால பல்தேர்வு வினாக்கள்



## கடந்தகால பல்தேர்வு வினாக்கள்

**கமநல சேவைத் திணைக்களத்தின் பிரதான பணி பின்வருவனவற்றுள் எது?**

1. கமநல அபிவிருத்திச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
2. விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
3. விவசாய உபகரணங்களை காப்புறுதி செய்தல்.
4. ஊனமுற்ற மற்றும் வலுவிழந்த விவசாயிகளுக்கு உதவி புரிதல்.
5. பசளைகளின் தரத்தை உறுதிப்படுத்தல்.

**விவசாய அபிவிருத்தியில் பங்குவகிக்கும் சந்தைப்படுத்தலுடன் தொடர்புபடாத நிறுவனம் எது?**

1. கால்நடை வளர்ப்புச் சபை
2. கூட்டுறவுத் திணைக்களம்
3. மரமுந்திரிகை கூட்டுத்தாபனம்
4. தேயிலைச் சபை
5. சமுர்த்தி அதிகார சபை

**2000 ம் ஆண்டு 46 ம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரதான நோக்கம்**

1. விவசாயிகளிற்கான அமையங்களை (ஒழுங்குகளை) ஸ்தாபித்தல்.
2. விவசாயிகளிற்கான ஓய்வூதியத் திட்டத்தை ஸ்தாபித்தல்.
3. குத்தகை விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
4. நெற்காணிகளை வேறு பயன்பாடுகளிற்காக மாற்றுவதைக் கட்டுப்படுத்தல்.
5. அரசிடமுள்ள மேலதிக நிலத்தைப் பெற்று பலன்தரும் முறையில் அவற்றைப் பயன்படுத்தல்.

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம் (ZEO - கிளிநொச்சி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.ஆ .ஜெஸ்லின், ஆசிரியர் - த,தொ,தொ (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி - இளவாலை )
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



**தற்கால விவசாயத்துறையில் நிலவும்சவால்களை வெற்றி கொள்ள மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. கீழ்த்தரப்பட்ட கூற்றுக்களில் உண்மையானவை?**

**A - விவசாயப் பண்டங்களின் சந்தைப்படுத்தலுக்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

**B - வேறு நடவடிக்கைகளுக்காக விவசாய நிலங்கள் பயன்படுத்தப்படுவதை மட்டுப்படுத்தல்.**

**C - விவசாயத்துறை சார்ந்த தொழிலாளர்கள் இத்துறை விட்டு விலகுவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.**

**D - வெளிநாடுகளில் இருந்து விவசாயப் பண்டங்களை இறக்குமதி செய்தல்.**

1. A , B மட்டும்
2. A ,B , C மட்டும்
3. A ,B,D மட்டும்
4. A , C , D மட்டும்
5. B , C , D மட்டும்

**இலங்கையில் வேலைவாய்ப்புக்கு விவசாயத் துறையின் மூலம் கிடைக்கும் பங்களிப்பு?**

1. முக்கியமாக அமைவதுடன் படிப்படையாக குறைந்து செல்கின்றது.
2. முக்கியமாக அமைவதுடன் படிப்படியாக அதிகரித்துச் செல்கின்றது.
3. முக்கியமாக அமைவதுடன் உயர் பெறுமானத்தில் நிலையாகக் காணப்படுகின்றது.
4. முக்கியமாக அமைவதில்லை. ஆனால் படிப்படையாக குறைந்து செல்கின்றது.
5. முக்கியமாக அமைவதில்லை. ஆனால் உயர் பெறுமானத்தில் நிலையாகக் காணப்படுகின்றது

**இலங்கையில் தரிசு நிலங்கள் எந்தச் சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கப்பட்டது?**

1. 1980 இன் இல 50 காணி சுற்றாடல் சட்டம்
2. 1972 இன் இல 1 காணி மறுசீரமைப்புச் சட்டம்
3. 1979 இன் இல 42 விவசாய காணிச் சட்டம்
4. 1979 இன் இல கமநல சேவைகள் சட்டம்
5. 2000 இன் இல 46 கமநல அபிவிருத்திச் சட்டம்

**ஒன்றிணைந்த பீட முகாமை ஒன்றிணைந்த போசணை முகாமைத்துவம் போன்ற அனுகூலமான விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தல்**

1. பேண்தகு விவசாயம் தொடர்பான கொள்கை
2. பீடைநாசினி தொடர்பான கொள்கை
3. பசளை தொடர்பான கொள்கை
4. மரபு ரீதியான விவசாயப் பயிர்கள் முறையியல்கள் ஆகியன தொடர்பான கொள்கை
5. நிலப்பயன்பாடு தொடர்பான கொள்கை

தொகுப்பு : திருமதி. N. வசந்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் - தொழில்நுட்பம் (ZEO - கிளிநொச்சி)
கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.ஆ .ஜெஸ்லின், ஆசிரியர் - த,தொ,தொ (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி - இளவாலை )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk